**செய்தி வெளியீடு எண்:22** **நாள்:09.01.2012**

# கைத்தறி மற்றும் துணிநூல் துறை

இந்தியாவில் ஆடை அலங்கார தொழில்நுட்பக் கல்வியை மேம்படுத்துவதற்காக, மத்திய ஜவுளி அமைச்சகத்தின் ஆதரவுடன் அமைக்கப்பட்ட தேசிய ஆடை அலங்கார தொழில்நுட்ப நிறுவனம் (NIFT) புதுடில்லி, பெங்களூர், சென்னை காந்திநகர், ஹைதராபாத், காங்கரா, மும்பை, ரேபரலி, பாட்னா, போபால், ஜோத்பூர், கன்னுார் மற்றும் ஷில்லாங் ஆகிய 15 இடங்களில் இயங்கி வருகிறது.

சென்னை தரமணியில் 1995 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு இயங்கிவரும் தேசிய ஆடை அலங்கார தொழில்நுட்ப நிறுவனம், ‘‘அலங்கார துணி வடிவமைப்பு’’ ‘‘தோலாடை வடிவமைப்பு’’, ‘‘ஜவுளி ஆடை வடிவமைப்பு’’, ‘‘பின்னலாடை வடிவமைப்பு’’ மற்றும் ‘‘சித்திரப் பூ வேலைப்பாடு வடிவமைப்பு’’ ஆகிய பிரிவுகளில் இளங்கலை பட்டமும் ‘‘அலங்கார மேலாண்மை’’ பிரிவில் முதுகலை பட்டமும் வழங்கி வருகிறது.

2012ஆம் கல்வி ஆண்டிற்கான சேர்க்கை தற்பொழுது நடைபெற்று வருகிறது. நிப்ட் சென்னை அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்கள் நேரில் பெற்றுக் கொள்ளலாம். ஆட்சேபர்கள் 10.01.2012வரை ஆன்–லைனிலும் (On-line) விண்ணப்பிக்கலாம். **E.mail: admissions.chennai@nift.ac.in**

12.02.2012ல் நுழைவுத் தேர்வு நடைபெற உள்ளது.

தமிழக மாணவ/மாணவியர்கள் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இணை இயக்குநர்(கைத்தறி)
சென்னை.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**